மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியால் 25,000 தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெறுகின்ற விதமாக திருப்பூரில் புதிய பின்னலாடை தொழிற்பூங்கா தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்பூங்கா கோவை—ஈரோடு தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள காரணத்தால், அங்கே நகரப் பேருந்து வசதிகள் இல்லாத காரணத்தால், தொழிலாளர்கள் அந்தத் தொழிற்பேட்டைக்குச் செல்வதற்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 305, திரு. மு. கார்த்தி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

305—

முன்பதிவகம்

***51600**—**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் சந்திப்பில் அரசு விரைவுப் பேருந்துகள் முன்பதிவகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முன்பதிவகம் திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சேலம் சந்திப்பில் முன்பதிவு மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. (ஆ) கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மே.ப. காமராஜ்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2005 ஏப்ரல் 6]

திரு. மே.ப. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் சந்திப்பில் முன்பதிவு மையம் அமைக்கும் செயற்குறிப்பு இல்லையென்று சொன்னாலும், சேலம் மத்தியப் பேருந்து நிலையத்திலே இயங்கி வருகிற முன்பதிவு அலுவலகத்தில் காலை 8–00 மணி முதல் 11–00 மணி வரையிலும், மதியம் 2–00 மணி முதல் 4–00 மணி வரையில்தான் பதிவு செய்கின்றார்கள். எனவே, இங்கு முன்பதிவு செய்ய வேண்டும் என்று சொன்னால், அன்றைக்கு ஒரு நாள் மட்டும்தான், காலையிலேயே பதிவு செய்து, மாலையிலேதான் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஒரு நாள், இரண்டு நாள் முன்னதாகப் பதிவு செய்கின்ற வசதி இல்லை. எனவே, அந்தத் திட்டத்தை அரசு ஏற்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சேலம் அச்சுவனேரி பேருந்து நிலையத்தில் அனைத்துப் பயணிகளின் வசதிக்காக கணினி மூலம் முன்பதிவு செய்யும் மையம் இயக்கப்பட்டு வருகின்றது. அந்த மையத்தில் இன்னும் கூடுதலாக அந்த வசதியை அதிகப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவருடைய கோரிக்கை குறித்து அரசு ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மே.ப. காமராஜ்.

திரு. மே.ப. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல சேலத்திலேயிருந்து சென்னை செல்வதற்கு மட்டும்தான் அங்கே முன்பதிவு நடைபெறுகிறது. மற்ற, பிற ஊர்களான மைசூர், பெங்களூர், பாண்டிச்சேரி போன்ற பல்வேறு பெரிய நகரங்களுக்குச் செல்வதற்கு முன்பதிவு செய்வதில்லை. எனவே, அதைச் செய்வதற்கு அரசு முன்வர நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமானது என்பதால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. வெங்கடாஜலம்.

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவு பஸ்கள் எல்லாம் புதிய பேருந்து நிலையத்திலேயிருந்து செல்கின்றன. எனவே, சேலம் மாநகரில் அரசு விரைவுப் பேருந்து நிலையம் செயல்படாமல் உள்ளது. அந்த இடம் நகரின் மையப் பகுதியில் உள்ளது. எனவே, அங்கு கைத்தறி வளாகம் அமைக்க கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. எனவே, அந்த இடத்தைக் கைத்தறித் துறைக்குக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தைப் பயன்படுத்துவதற்கு துறை, நமது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் tender மூலமாக அதை விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதிலே கைத்தறித் துறையும் பங்கேற்று அதிலே வெற்றிகரமாக வந்தால் அவர்களும் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.என். சேகரன்.

திரு. கே.என். சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் பல்வேறு வழித்தடங்களில் இயங்கிக்கொண்டிருந்த பேருந்துகள் சாலைகள் சரியில்லை என்கின்ற காரணத்தால் நிறுத்தப்பட்டிருக்கின்றன. எனது தொகுதியில்கூட திருவெறும்பூரிலிருந்து எழில் நகர் வரை செல்கின்ற அந்தப் பேருந்துகூட பல ஆண்டுகாலமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தச் சாலைகளை எல்லாம் மேம்படுத்தி மீண்டும் அந்த வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன நிலை, சென்ற ஆட்சிக் காலத்திலே இருந்தது உண்மைதான். அதை அவர் ஒப்புக்கொண்டதற்கு நன்றி. அதில் இப்போது பெருமளவு சீர்செய்யப்பட்டு, அந்த நிறுத்தப்பட்ட வழித்தடங்களில் எல்லாம் இப்போது புதிய பேருந்து வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. அதிலே இன்னும் ஓரிரு இடங்களிலே அப்படிப்பட்ட அந்தப் பேருந்து வசதி செய்யப்படாமல் இருந்தால், அரசு படிப்படியாக அந்த வசதிகளைச் செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2005 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என்.கே. பெருமாள்.

திரு. என்.கே. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளாத்திக்குளம் தொகுதியில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பேருந்துகள் தடை செய்யப்பட்டிருந்தன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டுக் கூடாது.

வினா எண் 306, திரு. கே.ஆர். இராமசாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

306—

மாணவர் விடுதி

***40759—திரு. கே.ஆர். இராமசாமி:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாடானை தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், கண்ணங்குடியில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு விடுதி ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கண்ணங்குடி ஒன்றியம், கண்ணங்குடியில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு புதிய விடுதி துவக்க இந்த ஆண்டு அரசின் பரிசீலனையில் இல்லை. (ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.ஆர். இராமசாமி, இருக்கையில் இல்லை.

வினா எண் 307, திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.